# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.532/2024
Sessions)

( Prosecution P.W.5
Deposition of witness for (Defence
(Court

| Name | முத்துலெட்சுமி | -- | |
|---|---|---|---|
| Husband's Name | ரஞ்சித்குமார் | Calling | கூலி |
| Village | மானகசேரி | Religion | |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of January 2026.

Accsed present.

**<u>முதல் விசாரணை</u>**

நான் திருவில்லிபுத்தூர் தாலுகா, மானகசேரி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். எனது சித்தி வள்ளியம்மாள் என்பவரது மகள் வள்ளிமயில் என்பவருக்கும், மாரிச்செல்வம் என்பவருக்கும் நடைபெற இருந்த திருமணத்திற்காக ஜவுளி எடுப்பதற்காக ஆஜர் எதிரியும், எனது சித்தப்பாவுமான ஈஸ்வரன் என்பவரது ஆட்டோவில் நானும், வள்ளியம்மாள், மாரிமுத்து, பால சரஸ்வதி, சோபனா மற்றும் பாண்டிச்செல்வி என்ற 11 வது படிக்கும் சிறுமியும் திருவில்லிபுத்தூருக்கு சென்று கொண்டிருந்தபோது உட்கார்ந்திருந்த வள்ளியம்மாள் ஆட்டோ மெதுவாக சென்று கொண்டிருந்தபோதே அவருடைய மணிப்பர்சை தேடிக்கொண்டிருந்தார். மணிப்பர்ஸ் காணாத பதட்டத்தில் திடீரென்று கவனக்குறைவாக அவரே ஆட்டோவில் இருந்து கீழே விழுந்துவிட்டார். நாங்கள் இறங்கிச் சென்று பார்த்து தூக்கியபோது வள்ளியம்மாள் மூச்சுப் பேச்சு இல்லாமல் இருந்தார். காயம் எதுவும் ஏற்படவில்லை. உடனடியாக அதே ஆட்டோவில் வள்ளியம்மாளை ஏற்றிக்கொண்டு திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். அரசு மருத்துவமனையில் வைத்து மருத்துவர் வள்ளியம்மாளை பார்த்துவிட்டு அவர் இறந்துபோய்விட்டதாக தெரிவித்தார். இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வேண்டுகோளின்பேரில் சாட்சி பிறழ் சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலிஸ் விசாரணையில் 03.12.2023ம் தேதி TN67BA1356 என்ற பதிவெண் உள்ள ஆஜர் எதிரிக்கு சொந்தமான ஆட்டோவில் அவர் ஓட்டிக்கொண்டு நானும், எங்களது ஊரைச் சேர்ந்தவர்களும் ஆட்டோவில் அமர்ந்து கொண்டு ஆட்டோவின் பின்பக்கத்தில் என்னுடன் வள்ளியம்மாளும் உட்கார்ந்து சென்று கொண்டருந்தபோது பகல் 12.00 மணியளவில் சிவகாசி–திருவில்லிபுத்தூர் ரோட்டில் கொளூர்பட்டி அருகில் ஆஜர் எதிரி ஆட்டோவை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்றதால் வள்ளியம்மாள் நிலை தடுமாறி கீழே விழுந்துவிட்டதாகவும், இதைப் பார்த்த நான் ஆட்டோவை நிறுத்த சொன்னேன் என்றும், கீழே விழுந்த வள்ளியம்மாளை அதே ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம் என்றும், வள்ளியம்மாள் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றும், இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர் என்று நான் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி எனது சித்தப்பா என்பதால் அவரைக் காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of January 2026.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

M VEERANAN
Digitally signed by M VEERANAN
Date: 2026.01.19 11:45:08 +0530

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**